முடியாத சூழ்நிலை இருக்கிற காரணத்தால், தமிழ்நாட்டில் இருக்கிற விஞ்ஞானிகளிடத்திலே இது சம்பந்தமாக எல்லா விதமான மதி நுட்பங்களும் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 312, திரு. எம்.கே. பாலன், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

312—

போலி ரேசன் அட்டைகளை ஒழிக்க மீண்டும் கணக்கெடுப்புப் பணி.

*11857—திரு. எம்.கே. பாலன் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) போலி ரேசன் அட்டைகளை ஒழிக்க மீண்டும் ஒரு முறை கணக்கெடுப்பு செய்து புதிய அட்டைகள் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது இப்பணி தொடங்கும்?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): போலிக்குடும்ப அட்டைகளை ஒழிக்க மீண்டும் ஒருமுறை கணக்கெடுப்பு செய்து புதிய அட்டைகள் வழங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை. ஏற்கெனவே புழக்கத்தில் உள்ள போலி அட்டைகள் சென்ற ஆண்டு மட்டும் சுமார் ஐந்தரை லட்சம் அளவுக்குக் களையப்பட்டு விட்டன. இவ்வாண்டு புதிய அட்டைகள் வழங்கியிருக்கிறோம். அதிலேயே கணிசமான அளவுக்கு போலி அட்டைகள் களையப்பட்டு விட்டன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். கே. பாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போலி அட்டைகளை ஒழிக்க ஒவ்வொரு வீடாகக் கணக்கெடுப்பு எடுத்திருந்தால் அதிக அளவிலே போலி அட்டைகள் எல்லாம் ஒழிந்திருக்கும். அதே நேரத்திலே கார்டு இல்லாத மக்களுக்கெல்லாம் புதிய அட்டைகளும் போய்ச் சேர்ந்திருக்கும். கார்டு இல்லாதவர்களுக்கு ரேஷன் கார்டு தேவை என்கிறபோது அதற்கு விண்ணப்பிக்க அரசு உத்தரவிட்டு இருந்தும் கூட பிப்ரவரி மாதம் 28-ந் தேதி தான் கடைசி தேதி என்று அறிவித்த பிறகும் கூட மக்கள் இன்

றைக்கும் கூட என்னிடத்திலே ரேஷன் கார்டுக்கு சிபாரிசு கடிதங்களை வாங்கிக் கொண்டு செல்கிறார்கள். ஆகவே இக் குறைகளைத் தீர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா? அதே நேரத்திலே போலி அட்டைகளை ஒழித்ததற்கும் புதிய அட்டைகளை வழங்கியதற்கும் உணவுத்துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கணக்கெடுப்பு நடத்த 1998 ஆம் ஆண்டு முயற்சி செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1998 ஆம் வருடமா? 1993 ஆம் வருடமா ?

திரு. எம்.கே. பாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அமைச்சர் அவர்கள் புதிய அட்டைகள் வழங்கிவிட்டோம் என்று சொல்லிவிட்டதால், பொதுவாக ஐந்தாண்டுக்கு ஒருமுறைதான் கார்டுகள் வழங்குவது என்பதால், இப்போது 1993-ல் வழங்கியாகிவிட்டது. ஆகவே 1998-லே மீண்டும் ஒவ்வொரு வீடாகக் கணக்கெடுக்க நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பாலன் அவர்கள் போலி அட்டைகளை அறவே ஒழிப்பதற்கு வீடு வீடாகக் கணக்கெடுத்திருக்கலாமே என்று சொல்கின்றார்கள். சென்ற ஆண்டு வரை புழக்கத்திலிருந்த அட்டைகள் 1992 டிசம்பர் மாதத்தோடு முடிவடைந்து விட்டன. ஆகவே மீண்டும் கணக்கெடுப்பு நடத்தி, கொடுப்பதாக இருந்தால் கால தாமதம் ஆகும். எனவேதான் இருந்த அட்டைகளை அப்படியே புதுப்பிப்பது என்று அரசாங்கம் முடிவெடுத்து 1,23,00,000 கார்டுகள் அப்படி புதுப்பிக்கப்பட்டு விட்டன. கார்டுகள் இல்லை என்று புதிதாக விண்ணப்பிப்பவர்களுக்கு இரண்டு மாத கால அவகாசம் கொடுத்து பிப்ரவரி மாதம் இறுதி வரை நீங்கள் விண்ணப்பிக்கலாம் என்று சொல்லியிருந்தோம். அதன்படி தமிழகம் முழுவதுமிருந்து 36 லட்சம் மனுக்கள் வந்துள்ளன. இவைகள் இப்போது பரிசீலிக்கப்பட்டு புதிய அட்டைகள் வழங்கிக்கொண்டிருக்கிறோம். அப்படி வழங்கும்போது புதியதாக போலி கார்டுகள் தோன்றாமல் இருப்பதற்கு நடவடிக்கைகள் எடுத்திருக்கிறோம். ஆகவே எப்படியிருந்தாலும் இப்போது போலி கார்டுகளை ஒழிப்பதற்கு கடுமையான நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கிறோம். பல இடங்களில் இதுவரையிலே 100 கார்டுகள் 50 கார்டுகள் என்று வைத்திருந்த அப்படிப்பட்ட நிலமைகள் இப்போது இல்லாமல் இருக்கிறது. இருந்தாலும் அறவே ஒழிந்துவிட்டன என்று சொல்லமுடியாது.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களும் இதிலே ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதிலே யார் சம்பந்தப்பட்டிருந்தாலும்— அது வ்யாபாரிகளாக இருந்தாலும், அரசு ஊழியர்களாக இருந்தாலும், தரகர்களாக இருந்தாலும், தங்களுககு எங்கே தகவல் கிடைததாலும் உடனடியாகச் சொன்னால் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம்.கே. பாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரேஷன் கார்டு என்பது ஏழை எளிய மக்களுக்கு மட்டுமல்லாமல் மிகப் பெரிய பணக்காரர்களுக்குக் கூட அவசியம் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. ஏனென்றால் டெலிபோன் இணைப்புக் கேட்டு விண்ணப்பித்தாலும் ரேஷன் கார்டு இருக்கிறதா என்று கேட்கிறார்கள். பாஸ்போர்ட் கேட்பவர்களுக்குக்கூட ரேஷன் கார்டு இருக்கிறதா என்று கேட்கிறார்கள். அதன் அடிப்படையிலேதான் இதை நான் வலியுறுத்திக் கேட்கிறேன். எல்லோருக்கும் ரேஷன் கார்டு கிடைக்க வேண்டும் என்றால் ஒவ்வொரு வீடாகச் சென்று கணக்கு எடுத்தால் நிச்சயம் போலி கார்டுகள் ஒழிந்து போகும். அதே நேரத்தில் புதிய கார்டுகளும் மக்களுக்குக்கிடைக்கும். அந்த அடிப்படையிலேதான் இந்தக் கேள்வியைக் கேட்டேன்.

முற்பகல் 10-40

இன்றைக்கு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், கார்டு இல்லாதவர்களுக்கு எல்லாம் அவர்கள் விண்ணப்பிக்க 2 மாத கால அவகாசம் கொடுக்கப்பட்டது என்று சொல்லி இருக்கின்றார்கள். சென்னையை எடுத்துக்கொண்டால், 6 மண்டலங்கள் இருக்கின்றன. அந்த 6 மண்டலங்களிலே மட்டும் சுமார் 4 இலட்சம் பேர் கார்டு கேட்டு விண்ணப்பித்து இருக்கிறார்கள். ஆனால், அவர்களில் கார்டு உள்ளவர்களும் விண்ணப்பித்து இருக்கிறார்கள் என்பது என்னுடைய சந்தேகம். ஏனென்று சொன்னால், என்னுடைய தொகுதியிலேகூட அடிக்கடி ஒரே தாய்மார் 3 கார்டுகள் வாங்கி சென்று இருக்கிறார்கள். ஆகையால், போலி கார்டுகளை ஒழிக்க வேண்டும் என்றால், புதிய முறையிலே ஒவ்வொரு வீடாகச் சென்று கணக்கு எடுத்தால்தான் அதை ஒழிக்க முடியும் என்பது என்னுடைய எண்ணம்.

அமைச்சர் அவர்கள் கார்டு இல்லாதவர்களுக்கு அவர்கள் ரேஷன் கார்டுகளை வாங்க, கால அவகாசத்தை பிப்ரவரி மாதம் வரை கொடுத்து இருந்தார்கள். அப்படி இருந்தும் கூட, இப்போதும் தாய்மார்கள் இன்னும் நீட்டித்து விண்ணப்பித்துக் கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் விளம்பரங்களை

1993 ஏப்ரல் 12]

எல்லாம் படிப்பது இல்லை. சிலர் படித்து இருக்கலாம். இதை மேலும் தொடர வேண்டுமானால், இன்றைக்கு சென்னையிலே மட்டும் எவ்வளவு கார்டுகள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன என்பதை அறிந்து, எவ்வளவு பேர் விண்ணப்பித்து இருக்கிறார்கள், இன்னும் எவ்வளவு பேரிடம் விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் போலி கார்டுகளை ஒழிப்பதைப்பற்றி கேள்வி கேட்டு, இப்போது மூலக் கேள்வியையே மாற்றி இருக்கின்றார்கள். ஆனாலும், சென்னை நகரைப் பொறுத்தவரை, போலி கார்டுகள் அதிகமாக உள்ள நகரங்களிலே சென்னை நகரம் முதலாவது. போலி கார்டுகளை ஒழிப்பதற்கு எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுத்துக்கொண்டு இருக்கின்றோம். புதிதாக கார்டுகளை வழங்கும்பொழுது, நியாயமாக யார் யாருக்கு எந்தெந்த குடும்பங்களுக்கு கார்டு இல்லாமல் இருக்கிறதோ, அவ்வளவு பேருக்கும் வழங்கப்பட்டு விடும். அதிலே எந்தவிதமான சந்தேகமும் வேண்டாம் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். 2 மாத காலம், 3 மாத காலம் அவகாசம் கொடுத்து, அவர்கள் விண்ணப்பம் போட்டு விட்டார்கள். இதற்குப் பிறகும் விண்ணப்பிக்க வேண்டும் என்றால், இப்போது இருக்கின்ற விண்ணப்பங்களை எல்லாம் பரிசீலனை செய்து, அட்டைகள் வழங்கிய பின்னால்தான், அவைகளை எடுத்துக்கொள்ள முடியும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக குடும்ப அட்டைகள் வழங்குவது குறித்து சட்டமன்ற உறுப்பினர்கள் ஒரு குறிப்பிட்ட பாரத்தில் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தால், உடனடியாக அதை வழங்க வேண்டும் என்றும், அதன் பிறகு அதை மாற்றி அவற்றை விசாரணை செய்து வழங்கலாம் என்றும், அதன்பிறகு சட்டமன்ற உறுப்பினர்கள் கையெழுத்துப் போடவில்லை என்றும், இப்படி தினந்தோறும் மாற்றி மாற்றி அறிவிப்புக் கொடுத்த காரணத்தினால் பல பிரச்சினைகள் எழுந்து விட்டன. காரணம், அங்கே சில புரோக்கர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் கையெழுத்துப் போடவேண்டிய அவசியம் இல்லை என்று சொல்லி, ஒவ்வொரு மனுவுக்கும் 10 ரூபாய், 20 ரூபாய் என்று அவர்கள் சம்பாதிப்பதற்காக எங்களுக்கு

மிகப்பெரிய கேவலத்தை உண்டாக்கிவிட்டார்கள். ஆகவே, இது குறித்து நீங்கள் மீண்டும் பரிசீலனை செய்து நிரந்தரமான ஒரு ஸ்டேண்டிங் ஆர்டர் கொடுக்க வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்கள் என்றால் அவர்கள் மக்கள் பிரதிநிதிகள். மக்கள் பிரதிநிதிகள்-மக்களுக்கு குடும்ப கார்டுகளை வாங்கித் தர வேண்டிய பொறுப்பு எங்களைச் சார்ந்தது. நீங்கள் உத்திரவு போட்டாலும் போடாவிட்டாலும் எங்களுக்கு பொறுப்பு இருக்கிறது. ஆனாலும் கூட, அந்த பார்மை கொடுத்துவிட்ட பிறகு, அதிகாரிகள் எம்.எல்.ஏ. கையெழுத்து வேண்டிய தில்லை என்று சொல்லி விடுகிறார்கள். அப்படிப்பட்ட சூழ் நிலை எங்களுக்கு மிகப் பெரிய அசிங்கமாக போய்விடுகிறது. ஆகவே, மக்கள் பிரதிநிதிகளாகிய எங்களை மதித்து ஒரு நிரந்தரமான ஸ்டேன்டிங் ஆர்டர் போட்டு, எம்.எல்.ஏ. கையெழுத்துப் போட்டால் உடனே கார்டு கொடுக்கவேண்டும், பரிசீலிக்க வேண்டும் என்று அப்படிச் செய்தால்தான் அந்த அதிகாரிகளிடம் நாங்கள் வேலை வாங்க முடியும். ஆகவே, ஒரு நிரந்தரமான ஆர்டர் போடுவதற்கு அரசு மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் கடிதம் கொடுத்தால் அவர்களின் கடிதங்களுக்கு முன்னுரிமை கொடுத்து குடும்ப கார்டுகளை வழங்க வேண்டும் என்று நம் முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் ஆணை யைப் பெற்று உத்திரவிட்டோம். அது நடைமுறையிலே நடக்க ஆரம்பித்தது. ஆனால், கொஞ்ச நாட்களுக்குள், சைகுலேஸ்டைல் செய்து, அதிலே எம்.எல்.ஏ.-க்களின் கையெழுத்து பெற்று, பிறகு அவரவர்களாக பூர்த்தி செய்து கொள்ள ஆரம்பித்தார்கள். அதற்கு அடுத்த கட்டமாக பிரின்ட்டே செய்து எம்.எல்.ஏ.-க்களுடைய கையெழுத்தை முன்கூட்டியே வாங்கிக்கொண்டுபோய் வைத்துக்கொண்டு, அதை பில் அப் செய்து, அதை விலைக்கே விற்க ஆரம்பித்து விட்டார்கள். இது நடந்தது. ஒரு மாவட்டத்தில் பிடித்துக் கொண்டு வந்து அதைக் காண்பித்துவிட்டார்கள். பல இடங் களிலே, எம்.எல்.ஏ. யாருக்கு கையெழுத்து போடுகிறோம் என்று தெரியாத நிலைமை வந்து விட்டது. கார்டு கேட்பவர் களுக்கு சட்டமன்ற உறுப்பினர்களாலே மறுக்கவும் முடிய வில்லை. அப்படிப்பட்ட இக்கட்டான சூழ்நிலை வந்து, அவர் களுக்கு கெட்ட பெயர் வந்துவிடுகிறது என்ற சூழ்நிலை வந்த பிறகுதான், அதை வேண்டாம் என்று சொல்கின்ற நிலைமை ஏற்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். ஏற்கெனவே சட்டமன்ற உறுப்பினர்கள் பரிந்துரை செய்தவர்களுக்கு கார்டுகள் எல்லா மாவட்டங் களிலும் வழங்கப்பட்டுவிட்டன. அதிலே கொஞ்சம் இன்னும் கூட இருந்தது. ஆனால், இப்போது புதுப்பிக்கின்றபோது

1993 ஏப்ரல் 12]

அந்தப் பிரச்சினையே இல்லாமல் போய்விட்டது. இப்போது வந்து இருக்கின்ற எல்லா விண்ணப்பங்களையும்—அதிலே ஏற்கெனவே சட்டமன்ற உறுப்பினர்கள் கையெழுத்து போட்டு இருக்கின்றனர்—எல்லாவற்றையும் சேர்த்து இரண்டு அல்லது மூன்று மாத காலத்தில் புதிய அட்டைகள் வழங்கப்பட்டுவிடும்.

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தேனி பன்னீர் செல்வம்.

திரு. தேனி பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் சில இடங்களில் பிப்ரவரி மாதம் 28-ஆம் தேதி கெடு முடிந்ததற்கு பிறகு விசாரணைக்கு வர வேண்டிய அதிகாரிகள் விசாரணைக்கு வராமல் இருக்கிறார்கள். இப்படி காலதாமதம் செய்வதால் உண்மையில் யார் யாருக்கு கார்டு இல்லையென்பதைக் கண்டுபிடிப்பதில் சிரமம் ஏற்படும் என்பதை உணர்ந்து, இதிலே துரிதமாக நடவடிக்கையெடுக்க அரசு என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மார்ச் மாதத்தில் வட்டவாரியாகவும், கிராம வாரியாகவும் அந்த அப்ளிகேஷன்களை மனுக்களைப் பிரித்து எடுத்து, அதற்கு பிறகு ஒவ்வொரு கிராமமாகச் செல்ல வேண்டுமென்று உத்தரவிட்டு இருக்கிறோம். கிராமப்புறங்களில் அது கொஞ்சம் வேகமாக முடிந்து இருக்கிறது. நகர்ப்புறங்களில் பிரச்சினை இருந்தது. ஆனாலும் மார்ச் மாதத்தில் வேலையை முடித்து விட்டு, ஏப்ரல் மாதத்தில் இப்போது ஆய்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அட்டைகள் வழங்கப்பட்டு விடும். ஏற்கனவே, 50,000 அட்டைகளுக்கு மேலே வழங்கப்பட்டு விட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 313, திரு. கே.ஏ. மனோகரன், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

313—

மாவட்ட மத்தியக்கூட்டுறவு வங்கிகள் மூலம் வீட்டு வசதிக் கடன் வழங்கல்.

*12093—திரு. கே. ஏ. மனோகரன் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —